## 45. அரசனுடைய பொருளை அள்ளிக் கொடுத்த கதை

தொண்டைவளநாட்டில் இருந்த வேளாளச் செல்வன் ஒருவன் பொருளைப் புலவர்கட்கும் இரவலர்கட்கும் கண்ட படி வாரிக்கொடுத்துக் கொண்டிருந்தான். இதனால் இவனுடைய பொருள் மிகுவிரைவில் தீர்ந்து



போய்விட்டது. இரவலர்கட்குக் கொடுப்பதற்கு எத்தகைய பொருளும் இல்லை. வள்ளலாக விளங்கிய செல்வன் இல்லையென்றுசொல்வதற்கு நாணினான். இரப்போர்கட்கு இல்லையென்று கூறுவதினும் உயிரை விட்டு விடுவது சிறந்தது என்று முடிவு செய்தான். கழுத்தை அரிந்து உயிர்விடக் கருதிக் கருக்கரிவாளை யெடுத்துக்கொண்டுதற்கொலை செய்வதற்காகத் தனியிடம் ஒன்றை நாடிச் சென்று கொண்டிருந்தான்; அச்சமயத்திலும்இரவலர்கள் அவனை விடவில்லை. ஒரு புலவன், 'வண்டோவிடுந் தொண்டை மண்டலந்தானே தியாகம் உண்டோ இலையோ" என்று தொடங்கும் செய்யுள் ஒன்றைப் பாடிக்கொண்டு எதிர்ப்பட்டான். செல்வன் அப்புலவனுக்கு ஏதேனுங் கொடுக்க வேண்டுமென்று எண்ணியவனாய்க் காவலுக்குச் சிறிதும் அஞ்சாமல் அரசனுடைய பொருளறைக்குட் புகுந்து பொருளை வாரி வாரி அப் புலவனுக்குக் கொடுக்கத் தொடங்கினான். சாகத்துணிந்த அவன் எதற்கும் அஞ்சாமல் இத்தகைய செயலில் இறங்கி யது ஒரு புதுமையாகுமோ ? கொடையளிப்பதில் வெறி பிடித்தவர்கள் இவ்வாறுதான் செயல் புரிவர்.

(தொண்டைமண்டல சதகம்)

[கொடை]